# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

*********

முறையீட்டு மனு எண். 468/2016/பே–1
ஆணை நாள். 10 -07-.2018

ஆளூர் பேரூராட்சி ஊர் பொதுமக்கள்,
ஆளூர் பேரூராட்சி. --- முறையீட்டு மனுதாரர்கள்.

முன்னாள் பேரூராட்சித் தலைவர்,
ஆளூர் பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம். --- எதிர் மனுதாரர்

ஆணை.

ஆளூர் பேரூராட்சி ஊர் பொதுமக்கள் சார்பாக 20.12.2014ம் தேதியிட்ட திரு.மகாவிஷ்ணு என்பவரது, புகார் மனு பேரூராடசிகளின் இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 16458/2014/இ.2/நாள்.13.05.2016ன் மூலம் இம்முறைமன்ற நடுவத்தில் 30.05.2016 அன்று பெறப்பட்டுள்ளது. மேற்படி முறையீட்டு மனுவிற்கு முறையீட்டு மனு எண். 468/2016 என எண்ணிடப்பட்டது. மேற்படி முறையீட்டு மனு மீது அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் இறுதி ஆணை வெளியிடப்படுகிறது :-

மேற்படி புகார் மனுவில், கன்னியாகுமரி மாவட்டம், ஆளூர் பேரூராட்சி மன்றத் தலைவர் திருமதி. ரோஸ்லின் பிரேமலதா (எ) லதா சந்திரன், என்பவர் மீது கீழ்கண்ட புகார்களை தெரிவித்து புகார் மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

1. ஆளூர் பேரூராட்சிக்கு சொந்தமான சுங்கான்கடை என்ற ஊரில் ஒரு கோடி ரூபாய் லஞ்சப்பணத்தில் ஒரு மாளிகை கட்டப்பட்டுள்ளது
2. பல இடங்களில் அரசு புறம்போக்கு நிலங்களை கையகப்படுத்தியுள்ளார்
3. தேரைப்புவிளைக்கும்– பெருஞ்செல்வவிளைக்கும் இடையில் சுமார் 1 கிமீ தொலைவு போடப்பட்ட கான்கிரீட் பாதை 6 மாத காலத்தில் சல்லி பெயர்ந்து மோசமான நிலையில் உள்ளது.

4. தோப்புவிளை ஊர் நாராயணசாமி கோவிலுக்கு பின்னால் வடக்கு நோக்கி கொல்லன்குளம் வரை செல்லும் 1/2 கிமீ தூரமுள்ள கான்கிரீட் பாதையில் சுமார் 50 அடி தூரம் பாதை போடாமலேயே பட்டியல் போடப்பட்டுள்ளது. அந்த பாதையில் உள்ள இரு வாகை மரங்களை வெட்டி தனது வீட்டிற்கு கொண்டு செல்ல முயற்சித்தது.
5. காட்டுவிளை வீயன்குளம் , கட்டிமாங்கோடு பஞ்சாயத்தை சார்ந்தது எனவும், ஏற்கனவே இருந்த படித்துறையினை புதுப்பித்து அதற்கு வரம்பு மீறி படித்துறை ஆளூர் பேரூராட்சி நிதியில் அமைத்துக் கொடுத்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
6. நிறைய வேலைகளை செய்யாமலேயே பில்போட்டு தொகை எடுத்துள்ளதாகவும் அரசின் நிதி அதிக அளவில் மோசடி செய்யப்பட்டுள்ளதாகவும் செய்த வேலைகள் ஒன்றுகூட தரமாக இல்லை.
7. பிராந்தன சேரி ரோடு போட்டதாக பொய் கணக்கு காட்டி பணம் எடுத்தது.
8. கிறிஸ்டோபர் நகர் பகுதியிலும் பல வேலை செய்ததாக கணக்கு காட்டி பணம் எடுத்தது.

இம்முறைமன்ற நடுவ 01.06.2016ம் நாளிட்ட அறிவிப்பாணை மூலம் மேற்படி புகார் மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கத் தெரிவித்து ஆளூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

ஆளூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித ந.க.எண். அ1/66/2017/நாள் 15.02.2017ன்படி மேற்படி புகார் மனுவிற்கான விளக்க அறிக்கையினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

ஆளூர் பேரூராட்சி செயல் அலுவலர் மேற்படி புகார் மனு குறித்து பேரூராட்சி மன்ற முன்னாள் தலைவரை விசாரணை மேற்கொண்டதாகவும் அதன் அடிப்படையில் கீழ்கண்ட விவரங்களை சமர்ப்பிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

1. ஆளூர் பேரூராட்சி முன்னாள் தலைவருக்கு சுங்கான்கடையில் 1390 சதுர அடியில் ஒரு வீடு உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
2. ஆளூர் பேரூராட்சி சுங்கான்கடையில் பேரூராட்சிக்கு சொந்தமான குளங்கள் ஏதும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.
3. தோப்புவிளைக்கும், பெருஞ்செல்வவிளைக்கும் இடையில் போடப்பட்டுள்ள கான்கிரீட் சாலை அளவு புத்தகம் எண் 9/2014–15ன்படி அளவீடு செய்யப்பட்டுள்ளதாகவும் தொழில் நுட்ப உதவியாளரின் கண்காணிப்பில் வேலை செய்து முடிக்கப்பட்டு தற்போது நல்ல தரமானதாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
4. தோப்புவிளை ஊர் நாராயணசுவாமி கோவிலுக்கு பின்னால் வடக்கு நோக்கி கொல்லன்குளம் வரை செல்லும் பாதை 2010–11ம் வருடம் பொது நிதியில் ரூ.3.70 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, பேரூராட்சிக்கு நில ஒப்படைக்கப்பட்ட தூரம் வரை உரிய விதிமுறைகளுக்குட்பட்டு கான்கிரீட் தளம் போடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள கொல்லங்குளம் வரை உள்ள தூரம் தனியாருக்கு சொந்தமான பட்டா என்பதால் கான்கிரீட் சாலை போட வழியில்லை எனவும் மனுவில் குறிப்பிட்டுள்ளமரங்கள்தற்போதைய இடத்திலேயே உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
5. காட்டுவிளை வீயன் குளத்தில் ஆளூர் பேரூராட்சி மூலம் பொது நிதியில் ரூ.4.00 லட்சம் மதிப்பீட்டில் படித்துறை அமைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளதாகவும்,

படித்துறை அமைக்கப்பட்டுள்ள இடம் ஆளூர் பேரூராட்சி பகுதியினை தொட்ட இடம் எனவும் ஆளூர் பேரூராட்சி மக்கள்தான் பயன்படுத்தியும் வருவதாக தெரிவித்து உரிய விதிமுறைகளுக்குட்பட்டேபணி செய்து முடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

6. பேரூராட்சி மூலம் செய்யப்படும் எந்த ஒரு வேலையும் விதிமுறைகளுக்குட்பட்டு தொழில் நுட்ப உதவியாளரின் கண்காணிப்பின் கீழ் செய்து முடிக்கப்பட்டு மேற்பார்வை பொறியாளரின் அனுமதிக்கப்பட்ட பட்டியல்களுக்கு மட்டுமே தொகை செலவிடப்பட்டுள்ளதாகவும், வேலைகள் அனைத்தும் நல்ல தரமானதாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7&8..பிராந்தளசேரி மற்றும் கிறிஸ்டோபர் நகர் ஆகிய இடங்களில் செய்த வேலைகளுக்கு . மட்டுமே தொகை செலவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் புகார் மனுதாரர் திரு மகாவிஷ்ணு என்னும் பெயரில் ஆளூர் பேரூராட்சியில் எவரும் இல்லை எனவும் எனவே இப்புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளவை அனைத்தும் ஆதாரமற்றவை எனவும் தனது அறிக்கையில் ஆளூர் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 15.05.2017ம் நாளிட்ட அழைப்பாணையில் மேற்படி புகார் மனு தொடர்பாக 19.05.2017 அன்று கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் சர்க்யூட் ஹவுசில் நடைபெறவுள்ள நேரடி விசாரணையில் ஆஜராகி முறையிட்டு மனு தொடர்பான தனது விளக்கத்தினை தெரிவிக்கக் கோரி ஆளூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

19.05.2017 அன்று கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில், ஆளூர் பேரூராட்சி செயல் அலுவலர் திரு.என்.பிராங்கிளின் நவக்குமார், என்பவர் ஆஜராகி மேற்படி புகார் மனு தொடர்பாக தனது விளக்கத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"...... தான் ஆளூர் பேரூராட்சியில் 07.08.2015 முதல் செயல் அலுவலராக இருப்பதாகவும், தனக்கு முன்னர் திரு.ற. சாம்கிஸ்டன் என்பவர் 01.03.2014 முதல் 26.04.2015 வரையிலும், திருமதி. ந.உமா என்பவர் 27.04.2015 முதல் 31.05.2015 வரையிலும், திரு.மோகன்கென்னடி என்பவர் 01.06.2015 முதல் 06.08.2015 வரையிலும், செயல் அலுவலர்களாக இருந்ததாக தெரிவித்துள்ளார்.

பேரூராட்சித் தலைவர் குறித்து அனுப்பப்பட்ட புகார் கடிதம் விவரங்கள் தனக்குத் தெரியும் எனவும், பேரூராட்சியின் தலைவராக திருமதி I. ரோஸ்லின் பிரேமலதா என்ற லதா சந்திரன் என்பவர் ஆளூர் பேரூராட்சிக்கு சொந்தமான சுங்கான்கடை என்ற ஊரில் வீடு கட்டியுள்ளார் என்பது உண்மை எனவும் மேற்படி வீடு 1388 சதுர அடியில் தரைதளம் மற்றும் முதல் மாடி கட்டிட பரப்பளவு கொண்டதாகும் என தெரிவித்துள்ளார். நிலப்பரப்பு சற்று கூடுதலாக இருக்கும் எனவும் கார் நிறுத்தக்கூடிய அளவிற்கு கூடுதலாக இருக்கும் என தெரிவித்துள்ளார். மேற்படி வீட்டிற்கு 2013 ஆம் ஆண்டு வரி விதிப்பு செய்யப்பட்டதாகவும், வருடத்திற்கு வரி விதிப்பு ரூ.1,344/– வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இது பேரூராட்சியின் "B" மண்டலத்திற்கு உட்பட்டது எனவும் நில மதிப்போடு சேர்த்து சுமார் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள கட்டிடம் எனவும், அரசு

புறம்போக்கு நிலத்தினை கையகப்படுத்தியுள்ளதாக தெரியவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

தோப்புவிளைக்கும் பெருஞ்செல்வவிளைக்கும் இடையில் 1 கி.மீ அளவிற்கும்குறைவாக கான்கிரீட் பாதை அமைக்கப்பட்டுள்ளதால் அதன் மதிப்பீடு ரூ.3.75 லட்சம் எனவும் தெரிவித்துள்ளார். மேற்படி பணிக்கு இளநிலை பொறியாளர் அளவினை பதிவு செய்துள்ளதாகவும், உதவி செயற்பொறியாளர் 17.08.2014ல் மேலளவு செய்துள்ளதாகவும், புகார் மனுவில் தெரிவித்துள்ளவாறு ரோடு மோசமாக இல்லை எனவும் நன்றாக உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

தோப்புவிளை நாராயணசுவாமி கோவில் பின்னால் வடக்கு நோக்கி கொல்லன்குளம் வரை செல்லும் அரை கிலோமீட்டர் கான்கிரீட் பாதை போடப்பட்டுள்ளதாகவும் அதில் 50 அடி தூரம் சாலை அமைக்கவில்லை என்பது உண்மை எனவும் ஆனால் அதற்குரிய பணம் எதுவும் பட்டுவாடா செய்யப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.2010–11ம் ஆண்டில் ரூ.3.70 லட்சம் மதிப்பீட்டில் சாலை அமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

சுங்கான்கடையிலிருந்து ஆளூர் செல்லும் பாதையானது நெடுஞ்சாலைத்துறையினை சார்ந்தது எனவும் எனவே தலைவர் அதற்கான பணத்தினை செப்பனிடப்படாமல் எடுத்துக் கொண்டார் என்பது உண்மையல்ல எனவும் பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

வீயன்குளம் படித்துறை அமைத்தல் பணி செய்யப்பட்டதாகவும் அது காட்டுவிளை வீயன்குளம், கட்டிமாங்கோடு கிராம பஞ்சாயத்தை சார்ந்தது என்பது உண்மைதான் எனவும் மேற்படி பணி ரூ.4.00 லட்சம் மதிப்பீட்டில் ஆளூர் பேரூராட்சி பணத்தில் இருந்து செய்து கொடுக்கப்பட்டதாகவும், அப்போது திரு. பொ்பெற்றி டெரன்ஸ் லியோன், என்பவர் செயல் அலுவலராக இருந்ததாகவும், அவர் தற்போது புதுக்கடை பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிவதாகவும் தெரிவித்துள்ளார். மேற்படி பணிக்கு உரிய அனுமதி பெற்றதாக தெரியவில்லை எனவும் தெரிவித்துள்ளார். பிராந்தினசேரி ரோடு போட்டதாக பொய்கணக்கு காட்டியதாகவும், கிறிஸ்டோபர் நகர் பகுதியில் வேலை செய்யாமல் பணம் எடுத்ததாகவும் புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளது உண்மையல்ல எனவும் தெரிவித்துள்ளார்.

இப்பேரூராட்சி தலைவர், தலைவர் ஆவதற்கு முன்பு ஆண்டிற்கு ரூ22/– வரி விதிப்பு உள்ள வீட்டில் குடியிருந்தார் என்பது உண்மை எனவும், பேரூராட்சித் தலைவி தனது புதிய வீட்டிற்கு இரண்டு வரி விதிப்புகள் செய்யுமாறு கோரியதாகவும், அதன் அடிப்படையில் 16/61B, 16/61 C என இரண்டு வரி விதிப்புகள் செய்து 26.02.2016–ல் ஆண்டிற்கு தலா ரூ.674/– வரி விதிப்பு செய்து மொத்தம் ரூ 1,348/– எனவும் இது பேரூராட்சி தலைவி தமிழ்நாடு மின்சார வாரியத்தில் சலுகை பெறுவதற்காக கோரப்பட்டதாகும் என ஆளூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார்.

ஆளூர் பேரூராட்சி செயல் அலுவலர், தனது 04.07.2017ம் நாளிட்ட கடிதத்தில் 19.05.2017 அன்று பேரூராட்சி நிதி மூலம் வீயன்குளம் படித்துறை அமைத்து சாலை சீரமைத்தது தொடர்பாக மேற்படி குளம் பேரூராட்சி எல்லைக்குட்பட்டதா என தெரிவிக்க கோரப்பட்டதைத் தொடர்ந்து மேற்படி பணி மேற்கொள்ளப்பட்ட இடம் கட்டிமாங்கோடு ஊராட்சி

எல்லைக்குட்பட்ட இடம் என தன்னால் விளக்கம் அளிக்கப்பட்டதாகவும் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 22.06.2017ம் நாளிட்ட கடிதத்தில் மேற்படி பணிக்கு செலவிடப்பட்ட தொகை குறித்து கோரிய விவரங்களுக்கு மேற்படி குளம் அமைந்துள்ள இடம் கட்டிமாங்கோடு கிராம ஊராட்சி சர்வே எண். 361/5 எனவும் விஸ்தீர்ணம் 65 ஏர்ஸ், வருவாய் கிராமம் குருந்தன்கோடு B எனவும் மேற்படி பணி மேற்கொள்ள ஆளூர் பேரூராட்சி மன்ற 27.01.2012ம் நாளிட்ட தீர்மான எண் 15 தீர்மானிக்கப்பட்டு ரூ.4.00 லட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதாகவும், குறைவான ஒப்பந்தபுள்ளி அளித்த திரு எஸ்.ஷேக்தாவூத் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி 21.03.2012ல் நடைபெற்ற பேரூராட்சி மன்றக் கூட்டம் பொருள் எண்37ன் படி அங்கீகரிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 21.07.2017 ம் நாளிட்ட அறிவிப்பாணையில், கன்னியாகுமரி மாவட்டம், ஆளூர் பேரூராட்சி பொது நிதியில் ரூ.4.00 லட்சம் மதிப்பீட்டில் படித்துறை சீரமைத்து சாலைபணி மேற்கொள்ள வீயன் குளம், படித்துறை சீரமைத்த இடம் ஆளூர் பேரூராட்சியினை தொட்ட இடம் என ஆளூர் பேரூராட்சி செயல் அலுவலரான திரு.நா.பிராங்கிளின் நவகுமார் தனது 15.02.2017ம் நாளிட்ட அறிக்கையில், தெரிவித்து, அதே பேரூராட்சி செயல் அலுவலர் தனது 19.05.2017ம் நாளிட்ட நேரடி விசாரணையில் மேற்படி குளம் கட்டிமாங்கோடு ஊராட்சியினை சார்ந்தது என தெரிவித்துள்ளதைத் தொடர்ந்து ஒரே பேரூராட்சி செயல் அலுவலர் இப்பணிக்கு இருவேறு பதில்கள் அளித்துள்ளதால், இக்குளம் எந்த பகுதியினை சேர்ந்தது என்பதை உரிய வருவாய்த்துறையினரின் ஆவணங்களை சரிபார்த்து அறிக்கை சமர்ப்பிக்கக் கோரி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ சட்டம் 2014 விதி 6(4) (a)-ன் கீழ், நாகர்கோவில் மண்டல் பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு ஆணையிடப்பட்டது.

நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது கடித ந.க.எண்.2668/2017/ப.4/நாள்.04.06.2018ன்படி தனது தல ஆய்வு அறிக்கையினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

தான் மேற்படி குளம் அமைந்துள்ள பகுதி தொடர்பாக தல ஆய்வு மற்றும் வருவாய்த்துறை ஆவணங்களை ஆய்வு செய்ததில் கீழ்காணும் விவரங்களை சமர்ப்பிப்பதாக தெரிவித்துள்ளார்.

1. வருவாய்த்துறை ஆவணங்களை ஆய்வு செய்யப்பட்டதில் காட்டுவிளை வீயன் குளம் கல்குளம் வட்டம், குருந்தங்கோடு கிராமம், சர்வே எண்.361/15–ல் 0.50.0 விஸ்தீர்ணம் கொண்டது எனவும் இது கட்டிமாங்கோடு ஊராட்சி பகுதியினை சார்ந்தது எனவும் தெரிவித்துள்ளார்.
2. இதில் பேரூராட்சியின் பொது நிதியில் இருந்து ரூ.4.00 லட்சம் மதிப்பீட்டில் படித்துறை சீரமைத்து கட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
3. காட்டுவிளை வீயன்குளத்தில் ஆளூர் பேரூராட்சிக்குட்பட்ட விஸ்தீர்ணம் ஏதுமில்லை எனவும் இக்குளக்கரையின் ஒரு பகுதி ஆளூர் பேரூராசியின் எல்லை (வில்லுக்குறி "C" கிராமத்தில்) உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
4. ஆளூர் பேரூராட்சிக்குட்பட்ட ஏராளமான பொதுமக்கள் பயன்பாட்டில் இக்குளம் இருந்து வந்த நிலையில் மன்றத் தலைவரால் 27.01.2012ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு

ரூ.4.00 லட்சம் மதிப்பீட்டில் பணி துவங்கப்பட்டு பட்டியல் தொகை ரூ.3,40,537/- ஒப்பந்தக்காரருக்கு 16.05.2012ல் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

5. கட்டிமாங்கோடு ஊராட்சிக்குட்பட்ட காட்டுவிளை வீயன்குளத்தில் ஆளூர் பேரூராட்சி பொது நிதியில் இருந்து ரூ.4.00 லட்சம் மதிப்பீட்டில் படித்துறை சீரமைக்க செலவிடப்பட்டது சரியானதாக கருத இயலாது, எனினும் காட்டுவிளை வீயன்குளத்தில் படித்துறை அமைக்கப்பட்டுள்ள இடத்தினை தொட்டு ஆளூர் பேரூராட்சி எல்லை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாலும், ஆளூர் பேரூராட்சிக்குட்பட்ட ஏராளமான பொதுமக்கள் மேற்படி குளத்தினை பயன்படுத்தி வந்த நிலையில் பேரூராட்சி மன்றத்தால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு படித்துறை சீரமைக்கப்பட்டதாக தெரிவித்தள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, ஆளூர் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் நேரடி வாக்குமூலம், நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் ஆய்வு அறிக்கை ஆகியவை பரிசீலிக்கப்பட்டன.

மேற்படி கட்டிமாங்கோடு ஊராட்சிக்குட்பட்ட காட்டுவிளை வீயன் குளம், ஆளூர் பேரூராட்சி மன்ற பொது நிதியில் இருந்து ரூ.4.00 லட்சம் மதிப்பீட்டில் படித்துறை சீரமைத்து சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. இக்குளம் முழுவதும் கட்டிமாங்கோடு கிராம ஊராட்சியினை சேர்ந்தது எனவும், ஆளூர் பேரூராட்சிக்குட்பட்ட இடம் உரிமையான பரப்பளவு எல்லை ஏதும் இக்குளத்தில் இல்லை என்பதும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம், 1920-ன் பிரிவு 126-ன்படி ஒரு நகர்புற உள்ளாட்சி அமைப்பு நீர் வழங்குவதற்காக அதன் எல்லைக்கு வெளியே வடிமுனை குழாய்கள் , ஏரிகள், நீர்த்தேக்கங்கள், பொறிகள், தண்டுக்குழாய்கள், கிணறுகள், நீர்ஊற்றுகள், நிலைக்குழாய்கள், பிற பணிகள் இவற்றை நிறுவ அல்லது அமைக்க அரசு அனுமதியின் பேரில் ஏற்பாடு செய்யலாமென வரையறுக்கப்பட்டுள்ளது. ஆனால் இவ்விடத்தில் பேரூராட்சி எல்லைக்கு வெளியேயும் பிறிதொரு கிராம உள்ளாட்சி அமைப்பின் எல்லைக்குள் அமைந்துள்ள இடத்தில் பணி மேற்கொள்ள எவ்வித அரசு அனுமதியும் பெறப்படவில்லை. பேரூராட்சிக்கு உட்படாத பகுதியில் உள்ள கட்டிமாங்கோடு வீயன் குளம் படித்துறை சீரமைத்து சாலைகள் சீர்மைக்க உரிய முன்மொழிவுகளை மாவட்ட ஆட்சித்தலைவருக்கு தெரிவிக்காமலும் அரசு அனுமதியினை முறையாக பெறாமலும் அப்பணியினை செயற்படுத்தியது மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உண்மை நிலையினை தெரிவிக்காதது போன்ற அனைத்து நிகழ்வுகளும் விதிமீறிய செயல்களாகவே கருதமுடிகின்றது. இம்மாதிரியான நேர்வுகளில் பேரூராட்சியின் பொது நிதியை சிலர் ஆதாயம் அடைவதற்காகவே விதிகளை மீறி எல்லைத் தாண்டி செயல்பட்டு இருப்பது மிகத் தெளிவாக புலனாகின்றது. இந்நிலையில் ஊராட்சி பகுதிகளில் விதிகளை மீறி பணி மேற்கொண்ட பொதுநிதி ரூ4.00 லட்சம் பேரூராட்சிக்கு ஏற்பட்ட இழப்பாகும். இப்பொதுநிதி பேரூராட்சி மக்களின் அடிப்படை தேவைகளை செயல்படுத்த பயன்படுத்தபட்டிருக்கலாம். மேற்கூறிய செயல்கள் விதிமுறைகளுக்கு முரணான செயல்பாடாகவே கருத வேண்டியுள்ளதாக இம்முறைமன்றத்தால் சுட்டிக்காட்டப்படுகிறது.

எனவே, பேரூராட்சி பொதுநிதி ரூ.4.00 லட்சம் இழப்பு ஏற்படுவதற்கு காரணமான ஆளூர் பேரூராட்சி நிர்வாக அலுவலரான திரு. பெர்பெற்றி டெரான்ஸ் லியோன் என்பவர் பொறுப்பாவார் என உறுதியாகிறது.

எனவே, இச்செயல்பாட்டிற்குரிய பொறுப்பானவர் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்குமாறு பேரூராட்சிகளின் இயக்குநரை இம்முறைமன்றம் கேட்டுக்கொள்கிறது.

இது தொடர்பான நடவடிக்கை விவரங்கள் அடங்கிய அறிக்கையினை 3 மாத காலவரம்பிற்குள் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்குமாறும் ஆணையிடப்படுகிறது.

2018-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 10 – ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//–
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
–//உத்திரவின்படி – அனுப்பப்படுகிறது//–

செயலாளர்.
19/7/18

19/7/18

பெறுநர்
1.திருமதி ரோஸ்லின் பிரேமலதா,
முன்னாள் பேரூராட்சி மன்றத் தலைவர்,
ஆளூர் பேரூராட்சி,
க.எண்.16–61–பி,
குலாளர் தெரு, சுங்கான்கடை,
கன்னியாகுமரி மாவட்டம்.
2.திரு . பெர்பெற்றி டெரான்ஸ் லியோன்,
( முன்னாள் செயல் அலுவலர், அளூர் பேரூராட்சி)
புதுக்கடை பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம்.
3.செயல் அலுவலர்,
ஆளூர் பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம்:
4.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
நாகர்கோவில் மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கன்னியாகுமரி.
5.பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
குறளகம், சென்னை –108.